உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தமிழாய் தமிழனாய் தமிழ்மொழிக்காய்!!!

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 06.08.2026 • மலர் 04 • இதழ்: 218 • வியாழன் • Edition : Nagercoil • 06.08.2026 • Vol : 04 • Issue : 218 • Page : 4 • Rs. 5/-


# தமிழக பட்ஜெட் 2026-ல் அறிவிப்புகள்

சென்னை: தமிழக அரசின் பட்ஜெட்டை நிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்த நிலையில்,

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ. 23,357 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டம், முதியோர்களுக்கான நடமாடும் சிகிச்சை மையங்கள் மற்றும் 'தாய் கேர்' மையங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நடப்பு நிதி ஆண்டுக்கான (2026- 27) பொது பட்ஜெட்டை தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்தார். அவர் தனது பட்ஜெட் உரையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்ந்து பேசியது:

தாய் மற்றும் குழந்தை நல பராமரிப்பு, தமிழகத்தின் பொது சுகாதார அமைப்பின் முக்கிய தூணாக விளங்குகிறது. சமீபத்திய தேசிய மாதிரி பதிவு அமைப்பின் கணக்கெடுப்பின்படி, தமிழகத்தின் குழந்தை இறப்பு விகிதம் ஆயிரம் பிறப்புகளுக்கு 11 ஆக உள்ளது. இது தேசிய அளவில் மிகக் குறைந்த விகிதங்களில் ஒன்றாகும்.

அரசு தொடர்ந்து பொது சுகாதாரத் துறையில் செயல்படுத்திய திட்டங்களால் மட்டுமே இது சாத்தியமானது. இதற்குச் சான்றாக, மாநிலத்தில் 99.9 சதவீத பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. இவற்றில் 53 சதவீதத்துக்கும் மருத்துவமனைகளில் மேற்பட்ட பிரசவங்கள் அரசு நடைபெறுகின்றன.

தாய்மாமன் தங்க மோதிரம்

அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை அதிகரித்து. இதன் மூலம் மருத்துவத் தேவைகளுக்காக பொது மக்கள் சொந்தமாகச் செலவிடும் தொகையைக் குறைக்கும் நோக்கில், அரசு தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், குழந்தையின் பிறப்பைக் கொண்டாடும் வகையிலும், தாய்மையின் இன்பத்தையும் முக்கியத்துவத்தையும் 4 தாய்மா மனின் அன்பளிப்பாக 1 கிராம் தங்க மோதிரம் இத்திட்டத்தை வழங்கப்படும். நடைமுறைப்படுத்துவதற்காக திருத்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 560 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

>மூத்தகுடிமக்களுக்காக தமிழகம் முழுவதும் 1,000 நடமாடும் முதியோர் சிகிச்சை மையங்கள் படிப்படியாகத் தொடங்கப்படும். ஒவ்வொரு நடமாடும் சிகிச்சை மையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு இயன்முறை மருத்துவர் பணியில் இருப்பர். தமிழகம் முழுவதும் உள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் இவர்கள் நேரில் சென்று இலவச உடல் பரிசோதனைசெய்வர். நாள்பட்ட நோய்களுக்கான மருந்துகளும் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாநிலம் முழுவதும் 'தாய் கேர்' என்ற பெயரில் கருவுற்ற பெண்களுக்கான சேவை மற்றும் உதவிமையங்கள் அமைக்கப்படும்.



இந்த மையங்களில் கருவுற்ற பெண்கள் அவர்களுடைய மகப்பேறு நாள் நெருங்கும் வேளையில் தங்கியிருந்து பயன் பெறலாம். இந்த மையங்களில், கருவுற்ற பெண்களுக்குக் கட்டணமில்லாமல் உணவு மற்றும் மருத்துவ உதவிகள், தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும். இத்திட்டத்துக்காக 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

> தொலைதூரமற்றும் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்குச் சிறப்பு மருத்துவப் பராமரிப்பு கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில், அரசு 'மையம் கிளை' (Hub and Spoke) மருத்துவமனைகள் வகையிலான தொலைமருத்துவப் பராமரிப்பு அமைப்பு உருவாக்கப்படும்.

, 'கூட்டுறவு சங்கங்களில் பயிர் கடன் பெற்ற 14.43 லட்சம் விவசாயிகளுக்குரூ.5,932 கோடி விவசாய கடன்தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

> கூட்டுறவுத் துறைக்கு 8,028 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

> தமிழகத்தில் நெல் உற்பத்தி குறையாமல் இருக்க 134 கோடி ஒதுக்கீட்டில்குறுவைதொகுப்பு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

> விவசாயிகளுக்கு வழங்கும் மின் மானியத்திற்கு ரூ.7,432 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண் மற்றும் உழவர் நலத்துறைக்கு 14,984 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்பு துறையில் வெளியான அறிவிப்புகள்:

> ஊரகப்பகுதிகளில் பெண்களுக்காக 'வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்பு' திட்டத்தின் கீழ் 100% மானியத்தில் 5 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்படும். 30,000 பெண்கள் பயனடையும் இத்திட்டத்திற்காக ரூ.110 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

> கால்நடை மருத்துவமனைகளுக்கு தேவையான 41 கட்டடங்கள் 47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

> கால்நடை மருத்துவ சிகிச்சை தேவைகளை பூர்த்தி செய்ய 25 கால்நடை மருத்துவமனைகள் கால்நடை பல்நோக்கு மருத்துவமனைகளாகவும், 210 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகவும் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

> தமிழகத்தில் 143 புதிய நடமாடும் கால்நடை மருத்துவ பிரிவுகள் ரூபாய் 35 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

>கால்நடைகளின் எதிர்பாராத இழப்பினால் விவசாயிகளுக்கு நிதிச்சுமை ஏற்படாமல் இருக்க கால்நடைகள் காப்போம் என்ற திட்டத்திற்கு ரூ.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

> கால்நடைகளுக்கு தரமான தீவனம் கிடைப்பதை உறுதி செய்ய தீவன விதை வங்கிகள் மற்றும் கிடங்குகள் 6.7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

> பசுந்தீவன சாகுபடியினை ஊக்குவிக்கவும், மேய்ச்சல் நிலங்களை மீட்டெடுப்பதற்கும் 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். சிறுபான்மையின மாணவர்களுக்குக் கால்வி உதவித் தொகையினை இந்த அரசு தொடர்ந்து வழங்கும். தமிழ்நாடு மாநில ஹஜ் கமிட்டி மூலம் முதல்முறையாக புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு வழங்கப்படும் 25,000 ரூபாய் மானியம் நமது அரசால் 35,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் 1.05 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் கூடுதலாகத் துவக்கப்படும். மேலும், கபர்ஸ்தான்கள், கல்லறைத் தோட்டங்களின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக திருத்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 34 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## கொட்டாரத்தில் நாய்களுக்கு தடுப்புசி போடும் முகாம்;கலெக்டர் பார்வையிட்டார்



நாகர்கோவில், ஆக.6

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் விலங்கு நலனை உறுதி செய்யும் நோக்கில், ஆண் மற்றும் பெண் சமூக நாய்களுக்கான நிரந்தர கருத்தடை சிகிச்சைகள் மற்றும் வெறிநோய் எதிர்ப்பு தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரப்படுத்த ப்பட்டு ள்ளன.

அதன் ஒரு பகுதியாக நேற்று கால்நடை பராமரிப்புதுறையின் கீழ் செயல்பட்டு வரும் கொட்டாரம் கால்நடை மருந்தக வளாகத்தில் செயல்பட்டு வரும் சமூக நாய்களுக்கான இனப்பெருக்க கட்டுபாடு அறுவை சிகிச்சை மையத்தில் சமூக நாய்களுக்கு தடுப்புசி செலுத்தப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சியர் பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் அவர் கூறுகையில்:

அகஸ்தீஸ்வரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், புதன், சனி ஆகிய நாட்களில் பொதுமக்கள் மற்றும் பணியாளர்கள் மீட்டு வரும் சமூக நாய்களுக்கு கொட்டாரம் மருந்தகத்தில் கருத்தடை மற்றும் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இது வரை அகஸ்தீஸ்வரம் ஊராட்சிக்குட்பட்ட 108 சமூக நாய்களுக்கு தடுப்புசி செலுத்தப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு 9442564469என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம். இதன்வாயிலாக தெரு நாய்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படுவதோடு, பொது மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். என கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் இணை இயக்குநர் கால்நடை பாராமரிப்புதுறை மரு.முனியசாமி, உதவி இயக்குநர் மரு.கிருஷ்ணசாமி, அகஸ்தீஸ்வரம் வட்டார வளர்ச்சி அலுவலர் கமலாபாய், பத்மா, கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலர், கால்நடை மருத்துவர்கள், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## அண்ணன் சீர்வரிசை திட்டம்

பட்ஜெட்டில் மகளிரை கவரும் வகையில் அண்ணன் சீர்வரிசை திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெண்களின் திருமணத்தன்று 8 கிராம் தங்க நாணயம், ஒரு பட்டுப் புடவை வழங்கப்படும். இதற்காக ரூ.812 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்

'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின்' கீழ் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், தாய்மாமனின் அன்பளிப்பாக 1 கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும்.

இதற்காக ரூ.560 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



## குமரியில் பாதுகாப்பான கிராமங்களை உருவாக்கும் ஊர்க்காவல் கண்காணிப்பு திட்டம்

நாகர்கோவில், ஆக.6

கன்னியாகுமரி மாவட்டத்தில் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தி, பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் "ஊர்க்காவல் கண்காணிப்பு திட்டம்" என்ற திட்டத்தை உருவாக்கி மாவட்டம் முழுவதும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

காவல்துறையும் பொது மக்களும் இணைந்து செயல்படும் இத்திட்டம், மக்கள் பங்கேற்பின் மூலம் குற்றங்களைத் தடுப்பதோடு, ஒவ்வொரு கிராமத்திலும் பாதுகாப்பு விழிப்புணர்வை வலுப்படுத்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது

இதன் ஒரு பகுதியாக, உட்கோட்ட காவல் அதிகாரிகள், காவல் ஆய்வாளர்கள், உதவி காவல் ஆய்வாளர்கள் மற்றும் "நம்ம ஊரு காவலர்கள்" மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் நேரடியாக மக்களைச் சந்தித்து, குற்றத் தடுப்பு, பொதுப் பாதுகாப்பு மற்றும் காவல்துறையுடன் இணைந்து செயல்படுவதன் அவசியம்குறித்துவிழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

## கன்னியாகுமரி படகு நிறுத்தும் தள விரிவாக்க பணி மாவட்ட ஆட்சியர் ஆய்வு



நாகர்கோவில், ஆக.6

கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் பாறையினை இணைத்து சுற்றுலாப் பயணிகள் அய்யன் திருவள்ளுவரை கண்டு களித்திட ரூ.37 கோடி மதிப்பில் கண்ணாடி இழை தரைத்தளம் பாலம் அமைக்கப்பட்டது. தற்போது அனைத்து நாட்களிலும் கன்னியாகுமரிக்கு வெளிநாடுகள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாட்டின்பிற மாவட்டங்கள், மற்றும் நமது கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வருகை தருகிறார்கள்.

அதனைத்தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பான மற்றும் தடையற்ற படகுப் போக்குவரத்தை உறுதிசெய்யும் வகையில் கன்னியாகுமரி பயணிகள் படகுத் துறையை விரிவாக்கம் செய்தல் பணிக்காக ரூ.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த படகு தள விரிவாக்க பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், நேற்று 5.ம் தேதி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை உயர்தரத்துடனும், விரைந்து முடித்து பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டுவரதுறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதாப் பூம்புகார் கப்பல் போக்குவரத்து பயணசீட்டு வழங்குவதில் உள்ள நிறை குறைகள் குறித்து சுற்றுலா பயணிகளிடம் கேட்டறிந்தார்கள். மேலும் அவர் பயணிகளோடு பயணியாக நின்று பயணச்சீட்டு பெற்று கொண்டு படகில் பயணித்தார்.

நடைபெற்ற ஆய்வில் நெடுஞ்சாலை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், கன்னியாகுமரி நகராட்சி ஆணையர் பட்டுசாமி, பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மேலாளர் முருகபூபதி, பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மக்கள் தொடர்பு அலுவலர்விஸ்வநாதன், பொதப்பணித்துறை உதவி செயற்பொறியாளர்கள், பணியாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



தூத்துக்குடி மாவட்டம் அள்ளிகுளம் சிப்காட் பகுதியில் அமையவுள்ள ஏப்ரல் பைபர் ரிசோர்ஸ் கம்பெனி நிறுவனத்திற்கு தேவையான நீர் ஆதாரத்தினை தூத்துக்குடி மாநகராட்சி எஸ் டி பி பிளான்டில் இருந்து எடுத்துச் செல்வதற்காக தூத்துக்குடி மதுரை நகாய் தேசிய நெடுஞ்சாலை பகுதிகளில் குழாய் அமைக்கப்படவுள்ள பணியினை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாநகராட்சி, (தமயந்தி பாபுசேட் மண்டபம்) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு இருப்பறையில் நகர்ப்புற உள்ளாட்சித்தேர்தலில் வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பெல் நிறுவன பொறியாளர்களால் அலகு ஏற்புச் சோதனை (UNIT ACCEPTENCE TEST) செய்யப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி நேற்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ரமேஷ்கிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.

# தென்காசியில் உதயநிதி ஸ்டாலினைக் கண்டித்து தவெக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி,ஆகஸ்ட்.06

தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்யை இழிவாகப் பேசியதாகக் கூறி திமுக இளைஞரணி செயலாளரும் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலினைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் தமிழக வெற்றி கழகத்தினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

அதன் ஒரு பகுதியாக தென்காசி மாவட்டம் புதிய பேருந்து நிலையம் முன்பு தமிழக வெற்றி கழகத்தின் மாவட்டச் செயலாளர் ராஜ பிரகாஷ் தலைமையில் தவெகவினர் திரண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராகக் கண்டன வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு தவெகவினர் முழக்கமிட்டனர். அரசியல் மற்றும் மேடை நாகரிகத்துடன் பேச வேண்டும் என்றும், பொது மேடையில் பேசிய பேச்சை அவர் தனது வீட்டில் பேசுவாரா என்றும் கேள்வி எழுப்பி ஆவேசமாகக் கோஷங்களை எழுப்பினர். தென்காசியில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் 200க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்துகொண்டு தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

## பெண்களை இழிவுபடுத்தும் வகையில் பேசியதால் உதயநிதி ஸ்டாலினை கண்டித்து

# கமுதியில் தமிழக வெற்றி கழகம் ஆர்ப்பாட்டம்

கமுதி, ஆக.06

தஞ்சாவூரில் நடைபெற்ற திமுக பொதுக்கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பெண்களை இழிவுபடுத்தும் வகையில் பேசியதாகல் , அவரைக் கண்டித்து தமிழக வெற்றி கழகம் சார்பில் தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அதன் ஒரு பகுதியாக, ராமநாதபுரம் மேற்கு மாவட்ட தமிழக வெற்றி கழகம் சார்பில் கமுதி பேருந்து நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



ஆர்ப்பாட்டத்திற்கு ராமநாதபுரம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மதன் தலைமை தாங்கினார். இதில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ராமநாதபுரம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பரமக்குடி மற்றும் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் என 1,000க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று, உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

# அரசின் தடையை மீறி கேரளாவுக்கு கனிம வளங்கள் கடத்தல் வேலியே பயிரை மேய்கிறதா?

## சமூக வலைதளங்களில் வைரலாகும் வீடியோ

மார்த்தாண்டம், ஆக.6

கன்னியாகுமரி மாவட்டம் உட்பட தமிழக பகுதிகளில் இருந்து பல ஆண்டுகளாக கனிமவளங்கள் லாரி லாரியாக தினம் தோறும் ஆயிரக்கணக்கான லோடுகள் கேரள உட்பட்ட அண்டை மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு வந்தது. இதனால் பெரும் விபத்துகளில் உயிரிழப்புகள் ஏற்பட்டு, பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அப்போது இது மத்திய அரசின் டிரா ன்ஸ்போர்ட்சிங் பாலிசி, ஆகவே தமிழக அரசு

இதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று கூறி வந்தது.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் தவெக தலைமையிலான தமிழக அரசு மூன்று மாதங்களுக்கு கேரள உட்பட்ட அண்டை மாநிலங்களுக்கு கனிம வளங்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. குமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இது தொடர்பாக கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு கொல்லங்கோடு வழியாக அதிக அளவில் எம் சான்ட் உள்ளிட்ட கனிம வள வாகனங்களை போலீசார் மடக்கி பிடித்து தனிப்படை போலீசாரிடம் ஒப்படைத்தனர். ஆனால் தனிப்படையினர் ஆதரவுடன் அந்த கனிம லாரிகள் அனைத்தும் கேரளாவுக்கு அனுப்பப்பட்டதாக பரபரப்பு புகார் எழுந்தது.

இந்த நிலையில் தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழக கேரள எல்லை கிராம பகுதி வழியாக கேரளாவிற்கு தடையை மீறி கனிமவளம் கொண்டு செல்லும் வாகனத்தை சமூக ஆர்வலர் ஒருவர் வீடியோவாக எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்டது வைரலாகி வருகின்றது. அதில் தினம் நூற்றுக்கணக்கான வாகனங்களில் கேரளாவுக்கு கடத்துவதாகவும், போலீசோ அதிகாரிகளோ கண்டு கொள்ளவில்லை என குறிப்பிட்டுள்ளார். இந்த வீடியோ தற்போது பரபரப்பாக வைரலாகி வருகிறது. மேலும் மாவட்டத்தின் பல பகுதிகளில் இரவானதும் சாரை சாரையாக கனிம லாரிகள் கேரளாவுக்கு படையெடுப்பதாக பரபரப்பு புகார் எழுந்துள்ளது.

குமரியில் வேலியே பயிரை மேய்வது போல இது போன்ற செயல்களில் ஈடுபடும் போலீசார், அதிகாரிகள் மீது மாவட்ட நிர்வாகமும், போலீஸ் துறையும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஈரோட்டில் இளம் பெண் மீது தாக்குதல் நடத்தி கொலை மிரட்டல் நடவடிக்கை எடுக்க எஸ் பி அலுவலகத்தில் கண்ணீர் மனு

ஈரோடு ஆக 6

ஈரோடு வெண்டிபாளையம் குப்பைகாடு பகுதியைச் சேர்ந்தவர் பானு (வயது 27) . இவர் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அளித்துள்ள புகார் மனுவில் கூறியிருப்பதாவது: ஈரோடு கருங்கல்பாளையத்தைச் சேர்ந்த பரிதா, அவரது மகன் அன்சாரி மற்றும் அவருடன் வந்தவர்கள் அத்துமீறி எனது வீட்டிற்குள் நுழைந்தனர். முன் விரோதம் காரணமாக சமையல் அறையில் இருந்த என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, தரதரவென வெளியே இழுத்து வந்து கடுமையாகத்தாக்கினர். மேலும் இரும்பு பைப் போன்ற ஆயுதங்களால் என்னை அடித்ததுடன் , சுவற்றிலும் மோதச் செய்து கொலை மிரட்டல் விடுத்தனர். இதில் மயக்கமடைந்த நான், ஈரோடு அரசு மருத்துவமனையில்தீவிரசிகிச்சை பெற்று பிறகு வீடு திரும்பினேன். இது குறித்து மொடக்குறிச்சி போலீசில் புகார் செய்தேன். இச்சம்பவம் தொடர்பாககாவல்நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து உள்ளனர். ஆனால் 7 நாட்கள் ஆகியும் என்னை தாக்கியவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் பாதிக்கப்பட்ட என்னை தொடர்பு கொண்டு



என்னை வீட்டை காலி செய்யுமாறு மிரட்டுகிறார்கள்.

எனவே என்னை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன் அவர்களுக்கு ஆதரவாக செயல்படும் போலீசார் மீதுநடவடிக்கைஎடுத்து எனது உயிருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும் . இவ்வாறு கண்ணீர் மல்க பானு புகார் மனுவில் கூறி உள்ளார்.



# தஞ்சாவூர் அடுத்துள்ள கள்ளபெரம்பூர் ஏரியை தூர் வாரும் பணியில் இளைஞர்கள் குழு

தஞ்சாவூர் ஆகஸ்ட் 6

தஞ்சாவூர் அருகே உள்ள கள்ளப் பெரம்பூர் பாசன ஏரியை 7 கிராம இளைஞர்கள் வாட்ஸ் ஆப் மூலம் குழுவை அமைத்து தூர் வாரும் பணியை தொடங்கி உள்ளனர்

தஞ்சாவூர் அடுத்துள்ள கள்ளப்பெரம்பூர்பாசனை ஏரி மாமன்னர் ராஜ ராஜ சோழனால் 1000 ஆண்டுகளுக்கு முன்பு வெட்டப்பட்ட பெரிய ஏரியாவும் ,சுமார் 10 கிலோமீட்டர் ஏரியை சுற்றியுள்ள 7 கிராமங் களில் உள்ள 2,662 ஏக்கர் பரப்புளவு விலை நிலங்களுக்கு பாசன நீரை சேமித்து வழங்க கூடிய ஏரியில் கருவேல மரங்களும், புதர்களும் மண்டி நீர் சேமிப்பை தடுத்தன. இதனால் கள்ளப் பெரம்பூர் கிராமத்தில் இளைஞர்கள் தூர்வார முடிவு செய்து வாட்ஸ் ஆப் குழு அமைத்து அதில் 7 கிராமம் மக்களின் பங்களிப்பாக ரூபாய் 20 லட்சம் வழங்கினர்

இதில் தஞ்சாவூர் மக்களவை உறுப்பினர் முரசொலி ரூபாய் 1 லட்சம் நிதியாக வழங்கிய நிதி திரட்டும் பணியை தொடங்கி வைத்தார் . தற்போது வரை 400 பேர் இணைந்து பணமாகவும் சிலர் பொக்லைன் இயந்திரங்கள், அவற்றிற்கு எரி பொருள் வழங்குவதாக தெரிவித்தனர்

இதனிலேயே மக்களவை உறுப்பினர் முரசொலி, மாநிலங் களவை உறுப்பினர் கல்யாண சுந்தரம் திருவையாறு சட்டப் பேரவை உறுப்பினர் துரைசந்திர சேகரன் ஆகியோர் கள்ளப்பெரம் பூர் பாசன ஏரி தூர்வாரும் பணியை பார்வையிட்டு இளைஞர் குழுவை பாராட்டினார்

போதிய தண்ணீர் இல்லாமல் வறண்டு நிலவும் நிலையில் கள்ள பெரம்பூர் ஏரி முழுமையாக தூர் வார சுமார் 200 கோடிக்கு மேல் தேவைப்படும். இந்த நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு ஒதுக்கிட கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வர உள்ளோம் என்றார்.

# கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி அண்ணா நகரில் தின தமிழ் செய்தி எதிரொலியால் மின் கம்ப கம்பிகள் மாற்றம்!

## பொதுமக்கள் பாராட்டு



திருப்பத்தூர்:ஆக:6,

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி ஊராட்சி அண்ணா நகர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் பல மாதகாலமாக மின் கம்பம் மற்றும் மின் கம்பிகள் மாற்றம் செய்யாமல் இருந்த நிலையில், பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் தகவல் அளித்ததின் பேரில் தினதமிழ் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. மேலும் சம்பந்தப்பட்ட கொரட்டி மின் பகிர்மான அலுவலர்கள் உடனடியாக மின் கம்பிகள் மற்றும் மின் கம்பங்களை மாற்றினர். அப்பகுதி மக்கள் மற்றும் இளைஞர்கள் நன்றி தெரிவித்தனர்.



# மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பாக மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில் 21 அம்ச கோரிக்கைகள் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

மதுரை மாவட்டம் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில், 21 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கிழக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் சந்திரசேகர் தலைமை வகித்தார் வட்டார கிளை தலைவர் குமார் முன்னிலை வகித்தார் மாவட்ட பொருளாளர் அமுத அரசன் கோரிக்கை விளக்க உரை ஆற்றினார் மாவட்ட துணைச் செயலாளர் அருண் நன்றி உரை கூறினார்

தொடர்ந்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், காலிப் பணியிடங்களை நிரப்புதல், ஊதிய முரண்பாடுகளை களையுதல், பதவி உயர்வு, பணிப் பாதுகாப்பு, ஓய்வூதிய திட்ட மேம்பாடு உள்ளிட்ட 21 அம்ச கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தினர்.

கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டங்கள் தொடரும் என்றும் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# 'கேவின்ஸ் தமிழ்நாடு பிக்கிள்பால் பிரீமியர் லீக்' சீசன் 2 அறிமுக நிகழ்ச்சி




சென்னை, ஆகஸ்ட் 06,

கேவின்ஸ் தமிழ்நாடு பிக்கிள்பால் பிரீமியர் லீக்' (TNPPL) சீசன் 2 சென்னையில் அறிமுக விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நடிகர் விக்ரம், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதுடன் நடிகைகள் வரலட்சுமி சரத்குமார், கீர்த்தி பாண்டியன் உள்ளிட்ட பிரபலங்கள் தங்கள் அணிகளுடன் மேடையில் தோன்றினர். லீக் இயக்குனர் யோகேஷ், தமிழ்நாடு பிக்கிள்பால் சங்கத்தின் தலைவர் மோஹித் குமார் மற்றும் செயலாளர் டாக்டர் காவ்யா சோமேஷ் ஆகியோர் இணைந்து இந்த நிகழ்வை தொடங்கி வைத்தனர்.

மேலும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களின் 12 அணிகளும் அறிமுகப்படுத்தப்பட்டது . தொடக்க விழாவில் பேசிய லீக் இயக்குனர் யோகேஷ் கூறியதாவது: "டி.என். பி.பி.எல் இன் சீசன் 2, தமிழ்நாட்டில் பிக்கிள் பால் விளையாட்டுக்கு ஒரு முக்கிய திருப்பு முனையாக அமைகிறது. அதிகரித்த பங்கேற்பு மற்றும் ரசிகர்களின் வளர்ந்து வரும் ஆர்வம் ஆகியவற்றை கொண்டு பார்க்கும் போது, இந்தியாவிலேயே பி க்கிள்பால் விளையாட்டின் முக்கிய மையமாக தமிழ்நாடு விளங்கும் என்று கூறினார். இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு பிக்கிள் பால் தலைவர் மோஹித் குமார் கூறியதாவது : "இந்த லீக் போட்டியானது வீரர்களுக்கு ஒரு தொழில்முறை தளத்தை வழங்குவதோடு, அடிமட்ட அளவில் இவ்விளையாட்டில் பங்கேற்பதையும் ஊக்குவிக்கிறது. தமிழ்நாடு பிக்கிள் பால் சங்கம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) ஆகியவற்றின் கூட்டு அங்கீகாரத்துடன் 2வது சீசனுக்கான லீக் போட்டிகள் 2026ஆம் ஆண்டு செப்டம்பர் 17 முதல் 20 வரை சென்னையில் உள்ள 'எக்ஸ்பிரஸ் அவென்யூ ஏட்ரியம்' பகுதியில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

# அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை வழங்குவது சவால் !



கிருஷ்ணகிரி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் "மறு சீரமைப்பு" என்ற பெயரில் செவிலியர் பணியிடங்களைக் குறைக்கும் ( ஆட்குறைப்பு ) நடவடிக்கையைக் கண்டித்து, கிருஷ்ணகிரியில் PHC, GH மற்றும் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செவிலியர்கள் கோரிக்கைகள் அடங்கிய பேட்ஜ் அணிந்து பணியில் ஈடுபட்டனர். தமிழ்நாடு செவிலியர் மேம்பாட்டு சங்கம் சார்பில் நடத்தப்பட்ட இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தில், கிருஷ்ணகிரி உள்ளிட்ட ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலிருந்து 210 செவிலியர் பணியிடங்களை வேறு மாவட்ட மருத்துவமனைகளுக்கு மாற்றி வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண் 204ஐ உடனடியாக ரத்து செய்ய வேண்டும் எனவலியுறுத்தப்பட்டது. மருத்துவமனைகளில் ஏற்கனவே கடுமையான செவிலியர் பற்றாக்குறை நிலவிவரும் சூழலில், பணியிடங்களை மாற்றுவது பணிச்சுமையை மேலும் அதிகரிக்கும் இதனால் கிருஷ்ணகிரி மக்களுக்கு சரியான மருத்துவ சேவை கிடைப்பது சவாலாகும். மேலும், ஒப்பந்த மற்றும் தற்காலிக செவிலியர்களின் பணி நிரந்தர வாய்ப்பையும் பறிக்கும் என்று செவிலியர்கள் தெரிவித்தனர். எனவே, ஆட்குறைப்பு அரசாணையை திரும்பப் பெற்று, நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய நிரந்தர செவிலியர் பணியிடங்களை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

# சென்னையில் முதல்முறையாக இம்பெல்லா–லேசர் இணை சிகிச்சை: ஆபத்தான இதய நோயாளி குணமடைந்தார்

பிரசாந்த் மருத்துவமனையில் 30% மட்டுமே இதயம் செயல்பட்ட 62 வயது நீரிழிவு நோயாளிக்கு 2 நவீன இதய சிகிச்சை

சென்னை, ஆக 06, 62 வயதான நீரிழிவு நோயாளிக்கு , கடுமையான மாரடைப்பு மற்றும் 'நுரையீரலில் நீர் கோர்த்ததால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக பிரசாந்த் மருத்துவமனை இதயம் 30 சதவீதம் மட்டுமே செயல்படும் நிலையில் இருந்தது.

அவருக்கு மூத்த இதய நோய் நிபுணர் டாக்டர். அரவிந்த் துருவாசல் மற்றும் அவரது மருத்துவக் குழுவினர் வெற்றிகரமாக சிகிச்சை அளித்து அவரது உயிரைக் காப்பாற்றி உள்ளனர்.

சென்னையில் முதல்முறையாக, இம்பெல்லா கருவி மற்றும் லேசர் சிகிச்சை ஆகிய இரண்டையும் சேர்த்து இந்த நோயாளிக்கு அளித்து, மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த இதய அடைப்பை சரிசெய்து அவரை குணப்படுத்தி யுள்ளனர்

இந்த சிகிச்சை குறித்து பிரசாந்த் மருத்துவமனையின் மூத்த இதய நோய் நிபுணர் டாக்டர். அரவிந்த் துருவாசல் கூறியதாவது: "இந்த நோயாளி ஒரு நீரிழிவு நோயாளி. அவருக்கு ஏற்கனவே அவர் அறியாமலேயே ஒரு மாரடைப்பு வந்திருப்பது தெரியவந்தது. இது இந்த சிகிச்சையை மேலும் சிக்கலாக்கியது. இது போன்ற மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளுக்கு, சாதாரண முறையில் ஆஞ்சியோபிளாஸ்டி செய்வது மிகவும் ஆபத்தானது. ஏனெனில், சிகிச்சையின் போது ரத்த ஓட்டம் தற்காலிகமாக தடைபடுவதை இதயம் தாங்கிக் கொள்ளாது. அவரது இதயம் 30% மட்டுமே செயல்பட்டுக் கொண்டிருந்ததால், ஆஞ்சியோபிளாஸ்டி சிகிச்சையின் போது எந்தவொரு சிறிய தவறுக்கும் இடமளிக்காதவாறு மிக கவனமாகச் செயல்பட வேண்டியிருந்தது.

'இம்பெல்லா' கருவியைப் பயன்படுத்தியதால், நாங்கள் சிகிச்சை செய்யும்போது அவரது உடலுக்குத் தேவையான ரத்த ஓட்டத்தைப் பாதுகாப்பாகப் பராமரிக்க முடிந்தது. இருப்பினும், அவரது இதயக் குழாயில் இருந்த அடைப்பு மிகவும் கடினமாக இருந்ததால் சாதாரண பலூன்களைப் பயன்படுத்தி அதைத் தாண்ட முடியவில்லை. எனவே, 'எக்சைமர் லேசர்' கருவி உதவியுடன் அந்த அடைப்பைத் துல்லியமாக நீக்கி, ஆஞ்சியோபிளாஸ்டி சிகிச்சையை வெற்றிகரமாக முடித்தோம். இந்த இரண்டு நவீன தொழில்நுட்பங்களையும் இணைத்துப் பயன்படுத்தியதால், அதிக ஆபத்தில் இருந்த ஒரு நோயாளிக்கு எங்களால் பாதுகாப்பாக சிகிச்சை அளிக்க முடிந்தது." என்று தெரிவித்தார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே அமைந்துள்ள ஏ.ரெட்டிபட்டி கிராமத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் புதிய ராஜகோபுரம் கட்டப்பட்ட நாள் முதல், ஞானத்தின் வடிவமாகவும் தீய சக்திகளை அழிக்கும் சக்தி கொண்டதாகவும் கருதப்படும் முருகப்பெருமானின் முதன்மை ஆயுதமான "வேல்" இல்லாமல் இருந்து வந்தது. இதை உணர்ந்த அப்பகுதியைச் சேர்ந்த ஜெயவேல் அவர்கள் தலைமையில் 19 பக்தர்கள் ஒன்றாக இணைந்து, அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமிக்காக 10 அடி உயரத்தில் பிரம்மாண்ட வேல் ஒன்றை வடித்துள்ளனர்.தயாரிக்கப்பட்ட அந்தப் பெருமைமிக்க இறைவனின் சக்திவேல், (ஆகஸ்ட் 05) பக்திப் பெருக்குடன் ராஜகோபுரத்தின் உச்சியில் முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டுகம்பீரமாகநிலைநிறுத்தப்பட்டது.வேல்பிரதிஷ்டைசெய்யப்பட்டதைத்தொடர்ந்து, முருகப்பெருமானுக்கும் ராஜகோபுரத்திற்கும் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் திரளான கிராம மக்களும் பக்தர்களும் கலந்துகொண்டு "அரோகரா" கோஷத்துடன் சாமி தரிசனம் செய்தனர்.தொடர்ந்து வந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.




# தமிழகம் தழுவிய போராட்டம்: அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம் எச்சரிக்கை

செங்கல்பட்டு: 'புதிய முதல்வர் விஜய் தலைமையிலான தமிழக அரசின் முதல் பட்ஜெட்டில், சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர்களின் நீண்டகால கோரிக்கைகள் எதுவும் இடம்பெறாதது மிகுந்த ஏமாற்றத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது' என தமிழ்நாடு அனைத்து சத்துணவு அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.பழனிச்சாமி, பொதுச் செயலாளர்பி.ராமமூர்த்தி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகம் முழுவதும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி திட்டங்களில் பல ஆண்டுகள் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆயிரக்கணக்கான பணியாளர்கள் ஓய்வுக்குப் பிறகு மிகக் குறைந்த ஓய்வூதியத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, மருத்துவச் செலவுகள் மற்றும் வாழ்வாதாரச் சுமைகள் அதிகரித்துள்ள நிலையில், புதிய அரசு தாக்கல் செய்த முதல் பட்ஜெட்டில் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை ஓய்வூதியர்களிடையே நிலவியது. ஆனால் அந்த எதிர்பார்ப்பு முழுமையாக ஏமாற்றமாக மாறியுள்ளது.

குறைந்தபட்ச ஓய்வூதியத்தை ரூ.7,850 ஆக உயர்த்துதல், அகவிலைப்படி வழங்குதல், மருத்துவப் படி அறிவித்தல், ஓய்வூதியர் உயிரிழந்தால் குடும்ப நலநிதி வழங்குதல், பண்டிகை முன்பணம் வழங்குதல் உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகள் எதுவும் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. இதனால் ஓய்வூதியர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள்தொடர்ந்து நீடிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

எனவே, தற்போது நடைபெற்று வரும் பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலித்து அறிவிக்க வேண்டும். குறிப்பாக குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.7,850, அகவிலைப்படி, மருத்துவப் படி, குடும்ப நலநிதி மற்றும் பண்டிகை முன்பணம் ஆகியவை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக அரசு உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், மாநிலம் முழுவதும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர்களை திரட்டி விரிவான போராட்டங்களை நடத்த வேண்டியகட்டாயநிலை உருவாகும். ஓய்வூதியர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, அரசு மனிதநேய அடிப்படையில் தங்களது கோரிக்கைகளை ஏற்று விரைவில் அறிவிப்பு வெளியிட வேண்டும் என முதல்வருக்கு கனிவுடன்வேண்டுகோள் விடுக்கிறோம்" என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மதுபானங்களுக்கு ரசீது கட்டாயம்: டாஸ்மாக் நிர்வாகத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை: தமிழகம் முழுவதும் அனைத்து டாஸ்மாக் கடைகளிலும் விற்கப்படும் மதுபானங்களுக்கு ரசீது வழங்க வேண்டும் என்று டாஸ்மாக் நிர்வாகத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த உத்தரவை அமல்படுத்தியது குறித்த அறிக்கையை டாஸ்மாக் நிர்வாகம் தாக்கல் செய்வதற்காக, வழக்கை ஆகஸ்ட் 7ஆம் தேதி தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் பெரம்பூர், கொளத்தூர், மாதவரம் உள்ளிட்ட 30 இடங்களில் உள்ள டாஸ்மாக் மதுபான கடைகளில் அதிக விலைக்கு மதுபானங்களை விற்பனை செய்த ஊழியர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டம் மற்றும் சட்டவிரோத பணப்பரிமாற்ற சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறை மற்றும் அமலாக்கத் துறைக்கு உத்தரவிடக் கோரி சென்னை செம்பியத்தைச் சேர்ந்த ஜி.தேவராஜன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இதுபோல, 2022ஆம் ஆண்டு முதல் 2026ஆம் ஆண்டு வரை கூடுதலாக வசூலிக்கப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட பணியாளர்களிடமிருந்து வசூலித்து அரசுக்கு செலுத்த வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு எதிராக பணி நீக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, டாஸ்மாக் நிர்வாகத்தின் தரப்பில் மனுதாரர் சுட்டிக்காட்டிய கடைகளில் 5 கடைகள் மூடப்பட்டுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டு, மீதமுள்ள கடைகளுக்கான இருப்பு மற்றும் விற்பனை பதிவேடு குறித்து கடை வாரியாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அறிக்கையை ஆய்வு செய்த நீதிபதி, டாஸ்மாக் கடைகளில் ரசீது புத்தகங்கள் பராமரிக்கப்படாததையும், நுகர்வோருக்கு ரசீதுகள் வழங்கப்படாததையும் சுட்டிக்காட்டி தமிழகம் முழுவதும் அனைத்து டாஸ்மாக் கடைகளிலும், ரசீது புத்தகங்களை பராமரிக்க வேண்டும் என்றும் டாஸ்மாக் நிர்வாகத்துக்கு உத்தரவிட்டார்.

மேலும், நுகர்வோர் வாங்கும் ஒவ்வொரு பாட்டிலுக்கும் ரசீது கொடுக்க வேண்டும் என்று டாஸ்மாக் நிர்வாகத்துக்கு உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை அமல்படுத்தியது குறித்த அறிக்கையை டாஸ்மாக் நிர்வாகம் தாக்கல் செய்வதற்காக, வழக்கை ஆகஸ்ட் 7ஆம் தேதி தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளார்.

# மண்டைக்காடு கோயில் முன்பு விஷ்வ ஹிந்து பரிஷத் மறியல் போராட்டம்; நிர்வாகிகள் கைது



குளச்சல், ஆக.6

கன்னியாகுமரி மாவட்டத்தில் புகழ் பெற்ற கோயில்களில் ஒன்றான மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. தினம் தமிழகம் கேரளா உட்பட்ட பல பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினம் தோறும் வந்து செல்லும் இந்த கோயில் பெண்களின் சபரிமலை என்று அழைக்கப் படுகிறது. இந்த கோயில் மேலாளர் செந்தில்குமார் மீது பல முறைகேடு குற்றசாட்டில் ஈடுபட்டு வருவதாக புகார் உள்ளது. அவர் மீது நடவடிக்கை எடுக்க பல முறை புகார்கள் அளித்தும் நடவடிக்கை எடுக்காத இந்து அறநிலையத்துறையை கண்டித்து விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் மண்டைக்காடு பகவதி கோயில் முன்பு போராட்டம் நடைபெற்றது. போலீசார் அனுமதி மறுத்து, விஷ்வ ஹிந்து பரிஷத் மாவட்ட தலைவர் பிரதீப் உட்பட்ட 25 மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தை தொடர்ந்து கோயில் முன் வாசலை தவிர மற்ற வாசல்கள் மூடப்பட்டு போலீசார் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. போலீசார் போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதை தொடர்ந்து கோயில் பிரார்த்தனை செய்யபோவதாக விஷ்வ ஹிந்து பரிஷத் நிர்வாகிகள் தெரிவித்தனர். ஆனால் அதற்கு போலீசார் அனுமதி மறுத்ததை தொடர்ந்து கோயில் முன் மறியல் போராட்டம் நடத்தியவர்களை போலீசார் கைது செய்தனர்.

# கிருஷ்ணகிரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 08.08.2026 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற உள்ளது. இவ் வேலைவாய்ப்பு முகாமில் கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரை சேர்ந்த முன்னணி தனியார்துறை நிறுவனங்களான. அசோக் . லேலண்ட், ஒலா எலக்ட்ரிக்., டைட்டன் கம்பனி, டிவிஎஸ் மோட்டார் . கம்பனி போன்ற 100க்கும் மேற்பட்ட தனியார்துறை வேலை அளிப்பவர்கள் கலந்துகொண்டு 5000க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு ஆட்களை தேர்வு செய்யவுள்ளனர். 8ம் வகுப்பு தேர்ச்சி முதல் +2 தேர்ச்சி, பட்டப்படிப்பு படித்தவர்கள், ஐடிஐ, டிப்ளமோ என அனைத்து வித கல்வித் தகுதியினரும்கலந்துகொள்ளலாம். இம்முகாமில் கலந்து கொள்ள அனுமதி இலவசமானதாகும். இம்முகாமில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு, மாவட்ட தொழில் மையத்தின் தொழில் முனைவோர்களுக்கான ஆலோசனைகள், மாவட்ட முன்னோடி வங்கியின் வாயிலாக வங்கி கடன் குறித்த வழிகாட்டுதல்கள் ஆகியன மேற்கொள்ளப்பட உள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் நடத்தப்படும் இவ் வேலைவாய்ப்பு முகாம், வேலைநாடுநர்கள் மற்றும் வேலை அளிப்பவர்களுக்கு முற்றிலும் இலவசமாக செயல்படுத்தப்படுகிறது. எனவே, தனியார்துறையில் பணிபுரிய ஆர்வமாக உள்ள அனைவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையலாம். இம்முகாமின் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டு தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்படும் வேலைநாடுநர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண் இரத்து செய்யப்படமாட்டாது. மேலும் விவரங்களுக்கு, கிருஷ்ணகிரி மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தினை நேரிலோ அல்லது தொலைபேசி எண் 04343291983 வாயிலாக தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார், தெரிவித்துள்ளார்.

# கிருஷ்ணகிரி அடுத்த அவதானபட்டியில் மாரியம்மன் திருக்கோயிலில் ஆடித்திருவிழாவை முன்னிட்டு கிராம தெய்வங்களுடன் ஊர்வலம்



கிருஷ்ணகிரி

ஆகஸ்ட் 6:

கிருஷ்ணகிரி அருகே உள்ள அவதானபட்டியில் அமைந்துள்ள மிகவும் பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோவிலின் ஆடித்திருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் முக்கிய நிகழ்வாக இன்று அவதானபட்டி, நெக்குந்தி, மற்றும் அதனை சுற்றியுள்ள சிறு, சிறு கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண்கள் கலந்து கொண்ட மாபெரும் மாவிளக்கு ஊர்வலம் நடைபெற்றது. இதில் மேளத்தாளங்கள் முழங்கிட, தர்மபுரிகிருஷ்ணகிரி தேசிய நெஞ்சாலை வழியாக கிராமத் தெய்வங்களை ஊர்வலமாக எடுத்து வந்த பத்தர்கள்அலகுகுத்தியும், தீச்சட்டி ஏந்தியும், அம்மன் வேடமணிந்தும், கரகம் எடுத்து வந்து அம்மனை வழிபட்டனர். இதில் பக்தர்கள் வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் ஆடுகள், கோழிகளை அம்மனுக்கு பலியிட்டு நேர்த்திக் கடன் செலுத்தினர். இந்த விழாவில் கிருஷ்ணகிரி, அவதானப்பட்டி, நெக்குந்தி, காவேரிப்பட்டிணம், திம்மாபுரம், பெரியமுத்தூர், சின்னமுத்தூர், உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துக் கொண்டு மாரியம்மனை வழிபட்டனர். இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை பரம்பரை அறங்காவலர் திருப்பதிகவுண்டர் மற்றும் பரம்பரை அறங்காவலர் உறுப்பினர்கள் மாரியப்பன்கவுண்டர், திருப்பதி கவுண்டர், மகேந்திர கவுண்டர், மாரியப்பன் கவுண்டர், சீனிவாச கவுண்டர், கிருஷ்ண மூர்த்தி கவுண்டர், உள்ளிட்ட அவதானப்பட்டி கிராம மக்கள் சிறப்பாக செய்து இருந்தனர்.

# கேரளா சிவசேனா பிரமுகர் கொலை செய்யப்பட்டு குழித்துறை ஆற்றில் வீசிய விவகாரம்

## 2 பேர் கைது முக்கிய குற்றவாளிகள் தலைமறைவு




மார்த்தாண்டம், ஆக.6

குமரி மாவட்டம் குழித்துறை தாமிரபரணி ஆற்றில் சடலமாக மீட்கப்பட்ட கேரளாவைச் சேர்ந்த சிவசேனா மாநில செயலாளர் சதீசன் அதுல் (32) கொலை செய்யப்பட்டிருப்பது பிரேத பரிசோதனையில் உறுதியானது. தலைப்பகுதியில் ஆழமான காயங்கள் இருந்ததால், ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர்.

விசாரணையில், கொலைக்கு தொடர்புடையதாக நிதீஷ் (29), பெர்லின் ஜியோ (27) ஆகிய இருவரை தனிப்படை போலீசார் கைது செய்துள்ளனர். முக்கிய குற்றவாளிகளாக கருதப்படும் தந்தைமகன் இருவரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

கொலை செய்யப்பட்ட உடலை கண்ணக்கோடு ரயில்வே மேம்பாலம் அருகே தாமிரபரணி ஆற்றில் வீசியதாகவும், பின்னர் காரை வேறு இடத்தில் நிறுத்திவிட்டு தப்பிச் சென்றதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. முக்கிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட பிறகே கொலைக்கான முழு பின்னணி வெளியாகும் என போலீசார் தெரிவித்துள்ளனர்

# நாகர்கோவில் மாநகராட்சி கூட்டத்தில் 3 கவுன்சிலர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு




நாகர்கோவில், ஆக.6

நாகர்கோவில் மாநகராட்சிக் கூட்டம் மேயர் மேரி பிரின்சிலதா தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆணையாளர் ஐஸ்வர்யா, மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டம் தொடங்கியதும், கவுன்சிலர்கள் செம்மாங்குளம் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரினர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் கவுன்சிலர்கள் பேசியதாவது:

செம்மாங்குளம் 6 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது. அந்த குளத்திற்கு தண்ணீர் எங்கிருந்து கொண்டுவரப்படும்? கழிவுநீர் கலக்காமல் தடுக்க என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்?"வடசேரியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையப் பணிகள் எந்த நிலையில் உள்ளது? என்றனர்.

இதற்குப் பதிலளித்து அதிகாரிகள் கூறியதாவது:செம்மாங்குளம் தூர்வாரி ஆழப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. அந்தப் பகுதியில் கழிவுநீர் கலக்காமல் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அப்பகுதியில் உள்ள வீடுகளின் கழிவுநீர் குளத்தில் கலக்காமல் தடுக்க உறிஞ்சுக் குழாய்கள் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே பல்வேறு பகுதிகளில் உறிஞ்சுக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன."செம்மாங்குளத்திற்கு தண்ணீர் கொண்டுவருவது தொடர்பாகப் பொதுப்பணித்துறை அதிகாரிகள் திட்டம் தயாரித்து வைத்துள்ளனர்; அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்."நாகர்கோவில் நகரில் ஏற்கனவே முதற்கட்டமாக பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இரண்டாவது கட்டமாக பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகள் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. என்றனர்.

இதனைத் தொடர்ந்து கவுன்சிலர்கள் கூறியதாவது:நாகர்கோவில் மாநகரப் பகுதியில் தற்போது கொசுத்தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கொசு ஒழிப்பு பணியாளர்கள் முறையாகக் கொசு மருந்து அடிக்கவில்லை. இதனால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், பல இடங்களில் பொதுமக்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த மாநகராட்சி தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்." "நாய்களின் தொல்லையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது; அவற்றைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலசூரங்குடி பகுதியில் பைப்லைன் உடைந்து பல மாதங்களாகத் தண்ணீர் வீணாகச் செல்கிறது. இதுகுறித்து பலமுறை அதிகாரிகளிடம் மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வலம்புரி விலை குப்பை கிடங்கில் குப்பைகள் மலை போல் தேங்கி கிடக்கிறது. அந்த குப்பைகிடங்கில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. இதனால் அந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாநகராட்சி உரிய நிவாரணம் வழங்குவதுடன் சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்த வேண்டும்.என்றனர்.

இதற்குப் பதிலளித்து அதிகாரிகள் கூறியதாவது:நாகர்கோவில் மாநகரப் பகுதியில் கொசுக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தினமும் கொசு மருந்து அடிக்கப்படுகிறது. எந்தெந்த வார்டுகளில் கொசு மருந்து அடிக்கப்படுகிறதோ, அந்தந்த வார்டு கவுன்சிலரிடம் ஊழியர்கள் கையெழுத்து பெற்று வருகின்றனர்.

"டெங்கு பாதிப்பைப் பொருத்தமட்டில், ஒரு சில இடங்களில் பாதிப்பு உள்ளது; அதைத் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

குறிப்பாக மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பேரூராட்சிப் பகுதிகளில் பொதுமக்கள் தண்ணீரைச் சேகரித்து வைத்துப் குடிப்பதால், அங்கு டெங்கு பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பொதுமக்களைத் தண்ணீரை நன்றாகக் காய்ச்சிக் குடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளோம்.

"அப்பகுதியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு டெங்கு பரவாமல் தடுக்கப்படுவதோடு, புகை மருந்து தெளிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. நாகர்கோவில் மாநகரப் பகுதியில் டெங்கு கட்டுக்குள் இருந்து வருகிறது.நாய் தொல்லையைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசிகள் செலுத்துவதுடன், கருத்தடை செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது.என்றனர்.

மாமன்றக் கூட்டத்தில் கவுன்சிலர்களின் தரையில் அமர்ந்து போராட்டம்:

இக்கூட்டத்தில், 3வது வார்டு கவுன்சிலர் அருள் சபிதாதனது வார்டுக்குட்பட்ட பகுதியில் வேலை செய்த காண்ட்ராக்டர் தன்னைத் தரக் குறைவாகப் பேசியதுடன் மிரட்டல் விடுத்ததாகக் கூறி, மாநகராட்சி கூட்டத்தில் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதேபோல், மாநகராட்சியில் நடைபெற்ற ஊழலைக் கண்டித்து 5வது வார்டு கவுன்சிலர் உதயகுமார் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

அவர் மாநகராட்சியில் நடைபெற்ற ஊழல் தொடர்பான வாசகங்கள் அச்சடிக்கப்பட்ட டிஷர்ட் அணிந்து இப்போராட்டத்தில் கலந்துகொண்டார்.

46 வது வார்டு கவுன்சிலர் வீரசூரபெருமாளும் தனது கோரிக்கையை வலியுறுத்திதரையில்அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

# திருப்பத்தூர் மாவட்டத்தில் நுகர்வோர் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சியர் ரவிகுமார் வழங்கினார்



திருப்பத்தூர்:ஆக:6

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில், மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் நடைபெற்ற உலக நுகர்வோர் உரிமைகள் தினவிழாவில், உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தினை முன்னிட்டு பள்ளி, கல்லூரிகளில் நடைபெற்ற கவிதை, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளில் மாவட்ட அளவிலான முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கினார். இவ்விழாவில் நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் தெரிவித்ததாவது:உலகம் முழுவதும் வர்த்தக முறைகள் காலத்திற்கேற்ப தொடர்ந்து மாறிவருகின்றன. ஆரம்ப காலங்களில் நேரடி வர்த்தகம் நடைமுறையில் இருந்த நிலையில், தற்போது தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இணைய வழி மற்றும் கைப்பேசி செயலிகள் மூலம் பொருட்கள் வாங்கும் நடைமுறை அதிகரித்துள்ளது.இதனைத்தொடர்ந்து நுகர்வோரின் நலனை பாதுகாக்கும் வகையில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களும் காலத்திற்கேற்ப Aவலுப்படுத்தப் பட்டு வருகின்றன.

அரசு பல்வேறு பாதுகாப்புச் சட்டங்களையும். உரிமைகளையும் உருவாக்கியிருந்தாலும், அவை பொதுமக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டுமெனில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் அவசியம். குறிப்பாக பள்ளிகள், கல்லூரிகள், இதுபோன்ற அரசு நிகழ்ச்சிகள் மற்றும் பொது இடங்களில் நுகர்வோர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்துவதன் மூலம் சமூகத்தில் சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

2.பொதுமக்கள் தங்களது உரிமைகள் மற்றும் சட்டப்பாதுகாப்புகள் குறித்து அறிந்திருந்தால் தான் ஏமாற்றும் வர்த்தக நடைமுறைகளிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும். இல்லையெனில், நேர்மையற்ற வணிக நடைமுறைகள் தொடரும் அபாயம் உள்ளது. இன்றைய தினம் துறை சார்ந்த அலுவலர்கள் நுகர்வோர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு சட்டங்கள் குறித்தும், தற்போது நடைபெற்று வரும் நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள பள்ளி மாணவர்கள் தங்களது பள்ளிகளுக்குச் சென்று, இந்நிகழ்வில் விவாதிக்கப்பட்ட நுகர்வோர் உரிமைகள் மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் குறித்து சக மாணவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்களும்இதற்கானவாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும். இதன் மூலம் அனைத்து மாணவர்களிடமும் நுகர்வோர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு பரவலாக ஏற்படும்.

எனவே, உலக நுகர்வோர் உரிமைகள் தின விழாபோன்றநிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்பட்டு, பொதுமக்களிடையே நுகர்வோர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

## தருமபுரி அடுத்த அன்னசாகரம் ஏரிக்கரையில்

# அன்பே சிவம் நற்பணி குழு சார்பில் 100 க்கும் மேற்பட்ட பனை மரம் நடவு செய்தனர்



தருமபுரி ஆகஸ்ட் 06

தருமபுரி அடுத்த அன்னசாகரம் ஏரிக்கரைசுமார் 350 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த ஏரியில் சீமை கருவேலம் அதிகமாக இருந்ததால், தண்ணீர் நீண்ட நாட்கள் தேங்குவதில்லை. இந்நிலையில் ஏரியில் தண்ணீரை தேக்கி நிலத்தடி நீரை பாதுகாக்கவும், மண் அரிப்பை தடுத்து, கரையை பலப்படுத்தும் வகையில், அன்னசாகரம் இளைஞர்கள் ஒன்றிணைந்து, அன்பே சிவம் நற்பணி குழுவை உருவாக்கினர். தொடர்ந்து குழு சார்பில் ஏரிக்கரையை சுத்தப்படுத்தி பனை மரத்தின் அவசியம் மற்றும் நன்மைகள் குறித்து குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள், பொதுமக்கள் என அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதனை தொடர்ந்து அன்பே சிவம் நற்பணி குழுவினர் ஒன்றிணைந்து, அன்னசாகரம் ஏரிக்கரையில் சுமார் 100 க்கும் மேற்பட்ட பனை மரக்கன்று மற்றும் பனை விதைகளை நடவு செய்தனர். முதலவதாக குழந்தைகளுக்கு. மரம் வைப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குழந்தைகள் முதல் மரகன்றினை வைத்து தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் தருமபுரி வட்டாட்சியர் சுகுமார் உட்பட அரசு அதிகாரிகள் மற்றும் அதிமுக,திமுக தவெக நிர்வாகிகள் ஆகியோர் பனை மரத் கன்றுகளை நட்டு வைத்தனர். இந்நிகழ்வில் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பொதுமக்கள் என பலரும் ஆர்வமுடன் பங்கேற்று ஏரிக்கரையில் பனை மரக் கன்றுகள் மற்றும் பனை விதைகளை நடவு செய்தனர். மேலும் இந்த பனை விதைகளை அழிய விடாமல், தினமும் பராமிரிப்போம். இதேப்போல் எல்லா கிரமத்திலும் ஏரிக்கரையில் பனை விதைகளை நடவு செய்து மண் அரிப்பை தடுத்து, கரையை பலப்படுத்தி,நிலத்தடிநீரை பாதுகாக்க வேண்டும் என இளைஞர் தெரிவித்தனர்.



தருமபுரி மாவட்டம் வீரி செட்டிப்பட்டி கிராமத்தில் எழுந்தருளி உள்ள ஸ்ரீ கொண்டமல்லம்மாள் ஆடிப்பெருக்கு திருவிழாவை முன்னிட்டு அம்மன் கரகம் கங்கைக்குச் சென்று சிறப்பு அபிஷேக பூஜை மற்றும் அலங்கார பூஜை சிறப்பாக நடைபெற்றது பின்னர் அம்மன் கரகம் ஊர் விளையாடு கோவிலுக்குள் சென்றது இதில் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்து அம்மன் அருளைப் பெற்றனர். விழா குழுவினர் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.



## பாலக்கோட்டில் அரசு தொழில்நுட்ப கல்லூரியில்

# ரூ.12.50 கோடியில் திறன்மிகு மைய கட்டிடம் காணொளி காட்சி மூலமாக முதலமைச்சர் திறந்து வைத்தார்

தருமபுரி ஆகஸ்ட் 06

தருமபுரி மாவட்டம் பூமாண்டஅள்ளி அரசு பலவகை தொழில் நுட்பக்கல்லூரியில் ரூ.6.35 கோடி மதிப்பீட்டில் திறன்மிகு மைய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் தரைத்தளம் 1060 ச.மீ பரப்பளவு கொண்டும். முதல் தளம் 368 ச.மீ பரப்பளவும் என மொத்தம் 1426 ச.மீ பரப்பளவு கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்று பாலக்கோடு அரசு பலவகை தொழில் நுட்பக்கல்லூரியில் ரூ.6.25 கோடி மதிப்பீட்டிலும் திறன்மிகு மைய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடம் தரைதளம் 1060 ச.மீ பரப்பளவு கொண்டும். முதல் தளம் 368 ச.மீ பரப்பளவு கொண்டும் என மொத்தம் 1428 ச.மீ பரப்பளவு கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடங்களில் தரக்கட்டுப்பட்டறை, ஆய்வகங்கள், பல்வேறு பணிமனைகள், கலந்தாய்வு கூடங்கள், உற்பத்தி மையங்கள், சேமிப்பு அறைகள், கழிப்பிடங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளது.இந்தஅரசுபலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள புதிய திறன்மிகு மைய கட்டிடங்கள் திறப்பு விழா சென்னை தலைமை செயலகத்தில் இருந்து புதிய கட்டிடங்களை மாணவர்களின் பயன்பாட்டிற்கு முதலமைச்சர் ஜோசப் விஜய் காணொளி காட்சி மூலமாக திறந்துவைத்தார். இதை தொடர்ந்து புதிதாக திறக்கப்பட்ட திறன்மிகு மையக் கட்டிடங்களில் ஆட்சியர் சரவணன் குத்துவிளக்கேற்றினார் .இந்த நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் ஜார்ஜ், செயற்பொறியாளர் ஜனார்த்தனன், பூமாண்டஹள்ளி அரசு பலவகை தொழில் நுட்ப கல்லூரி முதல்வர் செந்தில்குமார், பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் ரோஜா, உதவி பொறியாளர்கள் சிலம்பரசன், முருகதாஸ், பிரசன்னா உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# குமரியில் 12வது தேசிய கைத்தறி தினவிழா; நாளை நடக்கிறது

நாகர்கோவில், அக் .6

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சிதலைவர்முபாதாப் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது : 1905ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ஆம் நாள் அன்று தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தின் நினைவாக கைத்தறி தொழிலின் முக்கியத்துவம் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கைத்தறி தொழிலை மேம்படுத்தி கைத்தறி நெசவாளர்களின்வருவாயினைஉயர்த்தவும், அவர்களின் பெருமையை பறைசாற்றவும், ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 7ம் நாள் தேசிய கைத்தறி தினம் நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து 07.08.2026 நாள 12 –வது தேசிய கைத்தறிதினத்தைகொண்டாடும் வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக முன் பகுதியில் காலை 10.00 மணியளவில் மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சியினை திறந்து வைத்து கைத்தறி தின விழா மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்துகொண்டு கைத்தறி கண்காட்சியினை துவக்கி வைத்து, கைத்தறி நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்கள் மேலும் மேற்படி தினத்தில் பள்ளியாடி பகுதியிலுள்ள "இயேசுவின் திருஇருதய ஆடிட்டோரியத்தில்" வைத்து நெசவாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில் பொது மருத்துவம், கண் பரிசோதனை, பல் மருத்துவம், எலும்பு மூட்டு பரிசோதனை, காது, மூக்கு, தொண்டை மருத்துவம், தோல் மருத்துவம், நீரழிவு மற்றும் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு பரிசோதனைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட உள்ளது. இம்முகாமில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து நெசவாளர்களும் கலந்து கொண்டு பயன் அடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுள்ளார்.

# இருசக்கர வாகனங்களில் மாணவர்கள் பள்ளிக்கு வருகிறார்களா ? தலைமை ஆசிரியர்கள் கண் காணிக்க அறிவுரை

தஞ்சாவூர் ஆகஸ்ட் 6

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது

தமிழ்நாடு அரசு போக்குவரத்து விதிகளின் படி 18 வயதுக்கு மேற் பட்ட ஓட்டுனர் உரிமம் பெற்றவர்கள் மட்டுமே இரு சக்கரவாகனங்களைபயன்படுத்த வேண்டும். எனவே தஞ்சாவூரில் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் போக்கு வரத்து விதிகளுக்கு உட்பட்டு இரு சக்கர வாகனங்களை பயன்படுத் தாமல் இருப்பது சார்ந்து விவாதிக் கப்பட வேண்டும் கண்காணிப்பதுடன் அவ்வப்போது பெற்றோர்களை சந்திக்கும் போது இது தொடர்பான அறிவுரைகளை வழங்க வேண்டும்

பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு கூட்டங்களில் போது மாணவர்கள் இருசக்கர வாகனங்களை பயன்படுத்தாமல் இருப்பது சார்ந்து விவாதிக்கப்பட வேண்டும். மேலும் மாணவர்கள் அனைவரும் தினசரி பள்ளிக்கு வருகை தரும் போது எவ்வித வாகனங்களில் வருகின்ற னர் என்பதை தவறாமல் பள்ளி தலைமை ஆசிரியர் கண் காணிக்க வேண்டும். அந்த வாகனங்களை பாதுகாப்பானவை தானா?என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும் இதற்காக பொறுப்பாசிரியர்களைநியமனம்செய்ய வேண்டும்

மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது

# எம்.ஜி.ஆர் பாணியில் விஜய் உதயநிதி கைது குறித்து முத்துக்குமார் கருத்து



நாகர்கோவில் ஆகஸ்ட் 6

முதலமைச்சர் விஜய் எம்.ஜி.ஆர் பாணியை பின்பற்றி வருகிறார். அவரையும், ஆட்சியையும் அவதூறாக விமர்சிப்பவர்கள் யாராக இருந்தாலும்நடவடிக்கை எடுக்கப் படுகிறார்கள். அந்த வகையில் தான் எதிர் கட்சித் தலைவர் உதயநிதி கைது செய்யப்பட்டு உள்ளார் என்று அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முத்துக்குமார் கூறியதாவது: அநாகரிக பேச்சால் தான் இதற்கு முன்பு முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், எம்எல்ஏ மார்க்கண்டேயன் ஆகியோர் கைது செய்யப் பட்டார்கள். எதிர் கட்சி தலைவர் உதயநிதி மீது தற்போது கைது நடவடிக்கை பாய்ந்துள்ளது.

ஒரு தவறு செய்தால் அதை தெரிந்து செய்தால் தேவன் என்றாலும் விட மாட்டேன் என்கிற எம்ஜி ஆரின் பாடல் வரிக்கேற்ப விஜய் ஆட்சி செய்ய விரும்புகிறார் போலும். வருகிற சட்டமன்ற கூட்டத் தொடர்களில் ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடக்கூடாது என்பதையும் முன்கூட்டியே உணர்ந்தது போல் நடவடிக்கைகள் இருக்கிறது . எனவே எதிர் கட்சிகள் ஆக்கபூர்வமாக சட்டமன்றத்தில் இயங்குவது ஆரோக்கியமான அரசியலுக்கு வழி வகுக்கும். இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார்.

# சென்னிமலை பகுதிகளில் வளர்ச்சி பணிகள் ஈரோடு ஆட்சியர் ஆய்வு



ஈரோடு ஆக 6

ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முகாசிபிடாரியூர், பனியம்பள்ளி அட்டவணை பிடாரியூர். அம்மாபாளையம் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்முகாபிடாரியூர், அரசு உயர்நிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.89.22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து, ஆயிரத்து பத்து குடியிருப்பு பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய உயர்நிலைப்பள்ளியில் செயல்பட்டு வரும் சமையல் மற்றும் இருப்பு அறையினையும் பார்வையிட்டு மாணவர்களுக்கு சுகாதாரமான மற்றும் தரமான உணவு தயாரிக்கப்படுவதையும். சமையலறையின் தூய்மை குடிநீர் வசதி, உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் பராமரிப்பு உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, முகாசிபிடாரியூர் பருதியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் நுண்ணுயிர் ரக்கூடம் மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை மையம் ஆகியவற்றின் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மண்புழு உரம் தயாரிக்கும் மையத்தில் மண்புழு உற்பத்தி, மூலப் பொருட்களின் பயன்பாடு, உற்பத்தி அளவு மற்றும் உரத்தின் தரம் குறிந்தும் பார்வையிட்டார்.

தொடர்ந்து பணியம்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட தோப்புப்பாளையத்தில் அமைந்துள்ள உதயம் சிறப்புப் பள்ளியை பார்வையிட்டு, பள்ளியின் சமையலறை குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

செய்தி தொடர்புத்துறையின் சார்பில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தியாகி கொடிகாத்த குமரன் சிலை மற்றும் மணி மண்டப கட்டுமான பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். சென்னிமலை பேரூராட்சியில் சென்கோப்டெக்ஸ் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் போர்வை தயாரிக்கும் முறை குறித்தும், ஏற்றுமதி தயாரிக்கும் நேரம். விற்பனை குறித்தும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது கைத்தறி உதவி இயக்குநர் வெங்கடேசலு ஆய்வாளர் பிரபாகரன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர்கள் பிரதீப் கிஷோர், சென்னிமலை வட்டார வளர்ச்சி அலுவவர்கள் பாலமுருகன் ரவிச்சந்திரன் செயற் பொறியாளர் பாண்டியராஜ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

# புதிரைவண்ணார், பழங்குடியினர் மற்றும் நரிக்குறவர் நலவாரியங்களில் சேர சிறப்பு முகாம்கள் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்து விழிப்புணர்வு!

தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் புதிரைவண்ணார் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யும் வகையில் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள்: கல்வி உதவித்தொகை: 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ₹1,000: 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ₹1,500.

ஒய்வூதியம்: முதியோர் ஓய்வூதியமாக மாதம் ₹1,000. கண் கண்ணாடி நிதியுதவி: ₹500. இயற்கை மரண உதவித்தொகை: ₹20,000 மற்றும் ஈமச் சடங்கு செலவிற்காக ₹5,000.

விபத்து நிதியுதவி: விபத்தில் உயிரிழந்த உறுப்பினர்களின் குடும்பத்திற்கு ₹5,00,000; விபத்தில் ஊனமடைந்தோருக்கு ₹1,00,000. மகப்பேறு உதவித்தொகை: ₹6,000 (கருச்சிதைவு ஏற்பட்டால் ₹3,000).

திருமண உதவித் தொகை: ஆண்களுக்கு ₹3,000: பெண்களுக்கு ₹5,000.

. பிற திட்டங்கள்: தாட்கோ (TADHDCO) மூலம் சிறு தொழில் கடன் மற்றும் வெளி நாட்டில் உயர்கல்வி கற்க சிறப்பு உதவித் தொகை. இந்நலத்திட்டங்களைப் பெறத் தகுதியுடைய புதிரை வண்ணார்சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், அருகிலுள்ள தொழிலாளர் நல அலுவலகம் அல்லது புதிரைவண்ணார் நல வாரிய அலுவலகத்தை அணுகிப் பதிவு செய்துகொள்ளலாம். சிறப்புச் சேர்க்கை முகாம்கள் நடைபெறும் விவரம் : மதுரை மாவட்டத்தில் வசிக்கக்கூடிய புதிரை வண்ணார். பழங்குடியினர் மற்றும் நரிக்குறவர்சமூகத்தைச்சேர்ந்த பொதுமக்கள் நல வாரிய அடையாள அட்டை,சாதிச்சான்று, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றிற்கு விண்ணப்பிக்கும் வகையில் பின்வரும் நாட்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளன அடைமாஅட்டை மற்றும் குடும்ப அட்டை பின்வரும் நாட்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள் 25.07.2026 (சனிக்கிழமை) 01.08.2026 (சனிக்கிழமை) 08.08.2026 (சனிக்கிழமை) 16.08.2026 (ஞாயிற்றுக்கிழமை) முகாம் நடைபெறும் இடம் கணபதிபுரம் சமுதாயக்கூடம், குலமங்குலம் ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி, இளமனூர்தாலுகா அலுவலகம், வா டிப்பட்டி தாலுகா அலுவலகம், உசிலம்பட்டி விண்ணப்பிக்கும் முறை : 18 வயது பூர்த்தியடைந்த, 60 வயதுக்கு மிகாமல் உள்ள புதிரைவண்ணார் மற்றும் பழங்குடியினர் சாதிச்சான்றிதழ் வைத்துள்ள வேறு எந்த வாரியத்திலும் உறுப்பினராக இல்லாத நபர்கள் இம்முகாம்களில் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் சாதிச்சான்று, ஆதார் அட்டை மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் (Passport Size Photo) ஆகிய ஆவணங்களுடன் நேரில் வந்து பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கூடுதல் விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்கு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அலுவலகத்தை நேரடியாகவோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம். பயனாளியின் அனுபவ பகிர்வு! மகன் மறைந்த சோகத்தில் தவித்த எங்களுக்கு, அரசின் விரைவான உதவி பெரும் நம்பிக்கை அளித்துள்ளது!" இயற்கை மரண உதவித்தொகையாக ₹25,000 பெற்ற மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி ம. மீனாட்சி (மகன்: மறைந்த ம. சண்முகப் பாண்டி) அவர்கள் தனது நன்றியை பகிர்ந்து கொண்டார்



எங்கள் குடும்பம் பெரும்துயரமான சூழ் நிலையில் இருந்த போது, தமிழ்நாடு அரசு வழங்கிய இந்த நிதியுதவி எங்களுக்கு மிகுந்த ஆறுதலையும், பொருளாதார ரீதியாக பெரிய ஆதரவையும் அளித்துள்ளது. எனது மகன் மறைந்த ஒரே மாதத்திற்குள் இந்த உதவித்தொகை விரைவாகக் கிடைக்கப்பெற்றது. மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கையால் நேரடியாக இத்தொகையைப் பெற்றது எங்களுக்குள் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தில் தனிக் கவனம் செலுத்தி, பல்வேறு நலத்திட்டங்களை தடையின்றிச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசிற்கும். மாண்புமிகு அமைச்சருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை மாவட்டம்.**


## அறிவிப்பு

கே. மஞ்சு,19/71C. கட்டைக்காடு அம்மாண்டிவிளை அஞ்சல், என்ற முகவரியில் வசிக்கும் 62வயதான என். கண்ணன் அவர்களின் மகளான கே. மஞ்சு ஆகிய நான் பின்வருமாறு தெரிவித்து உறுதிமொழிப் பத்திரத்தை அளிப்பவர் நானே ஆவேன்.நான்மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் வசித்து வருகிறேன்.

எனது ஆதார் எண் 922669217838 இதில் எனது தந்தையின் பெயர் N.GEORGE என்றும் எனது TRANSFER CERTIFICATE 994 இல் எனது தந்தையின் பெயர் **N. KANNAN** என்றும் உள்ளது. **'GEORGE N'** மற்றும் **'N. KANNAN'** ஆகிய பெயர்கள் ஒரே நபரையே குறிக்கின்றன என்று இதன் மூலம் நான் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலே கூறப்பட்ட அனைத்தும் எனது அறிவு, நம்பிக்கை மற்றும் தகவல்களின்படி உண்மையானவை மற்றும் சரியானவை ஆகும்.

**கே.மஞ்சு**
D/O , **என்.கண்ணன்**
**19/71C, கட்டைக்காடு,**
**அம்மாண்டி விளை,**
**கன்னியாகுமரி மாவட்டம்,**
**கல்குளம் தாலுக்கா, தமிழ்நாடு 629204**


**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.